Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, நவம்பர் 22, 2024 | இதழ் 223

# அரசு பள்ளி வகுப்பறையில் பாடம் நடத்திய ஆசிரியை குத்திக் கொலை கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்: அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதி எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம்

சென்னை, 22 நவம்பர் 2024: ஆசிரியை ரமணி கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது குறித்து அண்ணா தி.மு.க., பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியை ரமணியை கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல். தி.மு.க., ஆட்சியில் கொலை என்பது சர்வ சாதாரணம் என்ற அவல நிலை வரும் அளவிற்கு நிர்வாகத் திறனற்ற தி.மு.க., அரசு சட்டம் ஒழுங்கைக் காக்கத் தவறியுள்ளது.

அரசுப்பள்ளி ஆசிரியர்கள், அரசு டாக்டர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு, அவர்கள் பணிபுரியும் அரசுக்கு சொந்தமான இடங்களில் கூட பாதுகாப்பு துளியும் இல்லாத அளவிற்கு சட்டம் ஒழுங்கை சீர்குலைத்துள்ள தி.மு.க., அரசுக்கு எனது கடும் கண்டனம். ஆசிரியர் ரமணி கொலை வழக்கில் கைதாகியுள்ளவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், முதல்வர் வெறும் விளம்பரங்களில் மட்டுமே செலுத்தும் கவனத்தை, தன்னுடைய முதல் பணியான சட்டம் ஒழுங்கைக் காப்பதில் இனியாவது செலுத்த வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மல்லிப்பட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியை, மாணவர்கள் கண்முன் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட கொடூர சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே மல்லிப்பட்டினம் கிராமம் சின்னமனை பகுதியை சேர்ந்தவர் முத்து. இவரது மகள் ரமணி (26). இவர் மல்லிப்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு பணியில் சேர்ந்தார். சின்னமனை பகுதியை சேர்ந்த பன்னீர் செல்வம் மகன் மதன் (வயது 30). இவருக்கு பெற்றோர் திருமணம் செய்ய முடிவு செய்தனர். இதைத்தொடர்ந்து ரமணியை பெண் கேட்டு சென்றுள்ளனர். ஆனால் ரமணிக்கு, மதனை திருமணம் செய்வதில் விருப்பமில்லை என கூறியதாக கூறப்படுகிறது. மேலும் ரமணியின் பெற்றோர் திருமணத்திற்கு மறுத்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் மதன் கோபம் அடைந்தார்.

இந்நிலையில் இன்று காலை பள்ளிக்கு சென்ற ஆசிரியை ரமணி (வயது 26) வழக்கம் போல் வகுப்பறையில் மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மதன், மாணவர்கள் கண்முன்னே ஆசிரியை ரமணியை கத்தியால் குத்தினார். படுகாயம் அடைந்த ஆசிரியை ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து அலறினார். உடனே



அந்த வாலிபர் அங்கிருந்து தப்பி ஓடினார்.

இதனை அடுத்து படுகாயம் அடைந்த ஆசிரியை ரமணியை அங்கிருந்த ஆசிரியர்கள் மீட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். ஆனால் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். அரசு பள்ளி வகுப்பறையிலேயே ஆசிரியை கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அந்த பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தகவல் கிடைத்ததும் சேதுபாவாசத்திரம் போலீசார் விரைந்து சென்று ஆசிரியை உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். அதைத் தொடர்ந்து ஆசிரியை ரமணியை குத்திக் கொன்ற மதனை கைது செய்தனர். ஆசிரியை ரமணியை ஒருதலையாக காதலித்து வந்த மதன், அவரை திருமணம் செய்து கொள்ள முடியாத ஆத்திரத்தில் கத்தியால் ஆசிரியை கழுத்தில் குத்தியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் பாலாஜி கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் இன்று அரசு பள்ளி வகுப்பறையில் ஆசிரியை ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் கல்வித்துறை மற்றும் அரசு ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே நடந்த சம்பவம் பற்றி தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் கூறும் போது, ரமணியை கொலை செய்த மதன் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளார். ஆசிரியை ரமணியை கொன்றது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள் என்றார்.

இந்த நிலையில், ஆசிரியை ரமணி குத்திக்கொலை செய்யப்பட்டதற்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப்பக்கத்தில், தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசுப் பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியை ரமணி அவர்களின் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். ஆசிரியர்கள் மீதான



வன்முறையை துளியும் சகித்துக் கொள்ள முடியாது. தாக்குதலை நடத்தியவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆசிரியை ரமணியை இழந்து வாடும் குடும்பத்தினர்களுக்கும், மாணவர்களுக்கும், சக ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.” என பதிவிட்டுள்ளார். மேலும் இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆசிரியர்கள் மீதான வன்முறையை துளியும் சகித்துக் கொள்ள முடியாது. ஆசிரியை கொலை செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு மாவட்ட கலெக்டர் நேரில் சென்று விசாரணை நடத்தி வருகிறார். குறிப்பாக பள்ளி மாணவர்களின் மனநிலையை அறிந்து அவர்களுக்கு உரிய கவுன்சிலிங் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அமைச்சர் கோவி. செழியன் மற்றும் நானும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்த உள்ளோம். ஆசிரியையின் குடும்பத்திற்கு உறுதுணையாக இருப்போம். தாக்குதலை நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை உறுதியாக மேற்கொள்ளப்படும். இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# 66 பேர் உயிரிழந்த கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கு: சி.பி.ஐ.க்கு மாற்றி ஐகோர்ட் உத்தரவு உடனடியாக ஆவணங்களை சி.பி.ஐ.யிடம் வழங்கி முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்

சென்னை, 22 நவம்பர் 2024: கள்ளக்குறிச்சியில் கடந்த ஜூன் மாதம் விஷசாராயம் குடித்து 66 பேர் உயிரிழந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு சம்பந்தமாக அனைத்து ஆவணங்களையும் சி.பி.ஐ.யிடம் அளித்து முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாகுளம் அருகே கள்ளச்சாராயம் விற்பனை நடந்து வந்தது. இந்த நிலையில் கடந்த ஜூன் 18 ந் அந்த பகுதியைச் சேர்ந்த பிரவீன், சுரேஷ், ஜெகதீசன் உள்ளிட்ட பலர் அங்கு கள்ளச்சாராயத்தை வாங்கி குடித்தனர். அவர்களில் 100க்கும் மேற்பட்டோருக்கு திடீர் உடல்நல குறைவு ஏற்பட்ட நிலையில் மயங்கி விழுந்தனர். இதனையடுத்து உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து அவர்களுக்கு பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் 66 பேர் பலினார்கள். இந்த சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் உலுக்கியது.

மேலும் பலருக்கு பார்வை பாதிப்பு, உடல்நலக் குறைவு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டன. உடல் நலனுக்கு கேடு விளைக்கும் மெத்தனால்லை தொழிற்சாலைகளில் இருந்து வாங்கி அவற்றை கள்ளச்சாராயத்தில் கலந்து விற்பனை செய்யப்பட்டதும், அதனை வாங்கி குடித்தவர்கள் உயிரிழந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இது தொடர்பாக சிபிசிஐடி போலீசாரும் தொடர்ந்து



பல்வேறு கட்டங்களாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விஷசாராய சாவு தொடர்பான வழக்கை உள்ளூர் போலீசார் விசாரித்தால் நியாயமாக இருக்காது. அதனால் சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் அண்ணா தி.மு.க., பாமக, பாஜக உள்ளிட்ட அரசியல் கட்சிகளை சேர்ந்தவர் தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்தனர். இந்த வழக்குகளை நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், பி.பி.பாலாஜி ஆகியோர் கொண்ட சிறப்பு டிவிசன் பெஞ்ச் விசாரித்தது.

இந்த மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப்பகுதியில்தான் சாராயம் தயாரித்து, விற்பனை செய்யப்படுவதாகவும், இதில் பலருக்கு தொடர்பு உள்ளதாகவும், அரசியல் கட்சியினர் குற்றம் சாட்டினர். விசாரணையின் போது, கள்ளச்சாராய உற்பத்தியாளர்கள், விற்றவர்கள் மீது மட்டும் தான் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதே தவிர தொடர்புடைய அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்படவில்லை எனக் வாதிடப்பட்டது. மேலும், கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி மாநிலங்களில் இருந்து மெத்தனால் கொண்டு வரப்பட்டுள்ளதால் இந்த வழக்கு விசாரணையில் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் சிபிஐ-க்கு மாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கோரிக்கை விடுக்கப்பட்டது. மாநில போலீஸ் தவிர்த்து, வேறு அமைப்பு விசாரித்தால் தான், முழுமையான நீதியை வழங்க முடியும் எனவும் வாதிடப்பட்டது.

விசாரணையின்போது பதிலளித்த தமிழ்நாடு அரசு, எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகளைத் தடுக்க ஆலோசனைகள் வழங்க ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தது. புலன் விசாரணை முடிந்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உள்ள நிலையில், சிபிஐ-க்கு மாற்றுவதால் எந்த பயனும் இல்லை எனவும் தெரிவித்தது. உள்ளூர் அரசியல்வாதி மற்றும் காவல்துறையினர் உடந்தையாக செயல்பட்டுள்ளதாகக் கூறப்படுவதில் எந்த ஆதாரங்களும் இல்லை.


கல்வராயன் மலைப்பகுதியில் ஏராளமான சோதனை நடத்தப்பட்டு கள்ளச்சாராய ஊரல்கள் அழிக்கப்பட்டு இருக்கிறது. தற்போது வரை கள்ளச்சாராய விற்பனையோ நடமாட்டமோ இல்லை என தமிழக அரசு வாதிட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்குகளின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தனர்.

இந்தநிலையில் இந்த வழக்கில் இன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி, கள்ளக்குறிச்சி விஷ சாராய மரண வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றம் செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்த தீர்ப்பை நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், பி.பி.பாலாஜி அமர்வு வழங்கியுள்ளது. மேலும் சிபிசிஐடி போலீசார் அனைத்து விசாரணை ஆவணங்களையும் சிபிஐயிடம் ஒப்படைக்கவும், சிபிஐ விசாரணைக்கு காவல்துறை ஒத்துழைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் தீர்ப்பு தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த பாமக வழக்கறிஞர் பாலு கூறியதாவது:

தமிழ்நாடு அரசு கள்ளச்சாராய வழக்கை முறையாக கையாளவில்லை. சம்பவத்தை தடுக்கத் தவறியவர்களை சஸ்பெண்ட் என்ற பெயரில் நீக்கிவிட்டு மீண்டும் பணியில் சேர்த்தது. மேலும் பல காவல் அதிகாரிகள் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால் தமிழக காவல்துறை விசாரிக்க கூடாது என நாங்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தோம். அதனை ஏற்று இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இந்த தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம்.

இது உண்மைக்கும் நீதிக்கும் கிடைத்த வெற்றி. விரைவில் தமிழக அரசு இது தொடர்பாக




ஆவணங்களை சிபிஐ வசம் ஒப்படைத்ததும், சிபிஐ அதிகாரிகள் விசாரணையை தொடங்குவார்கள். அதில் பல உண்மைகள் வெளிவரும். அதே நேரத்தில் தமிழக அரசுக்கு நான் வேண்டுகோள் ஒன்றை வைக்கிறேன். இந்த வழக்கில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யக்கூடாது. வழக்கு விசாரணை தாமதப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடக்கூடாது என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No. : TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சவரனுக்கு ரூ.400 அதிகரித்து மீண்டும் ரூ.57 ஆயிரத்தை தொட்ட தங்கம்

சென்னை, 22 நவம்பர் 2024: தங்கம் விலை சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு சவரன் ரூ.56,920-க்கும் விற்பனையாகிறது.

தங்கம் விலை கடந்த மாதம் (அக்டோபர்) இறுதி வரை உயர்ந்து வந்த நிலையில், இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து அதன் விலை குறைந்து கொண்டே வந்தது பெண்கள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

கடந்த 1-ந்தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்து 80-க்கும் விற்பனை ஆனது. அதன் பின்னர் விலை குறைந்து கொண்டே வந்து, கடந்த 17-ந் தேதி ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்து 480-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இடைபட்ட 17 நாட்களில் சவரனுக்கு ரூ.3 ஆயிரத்து 600 வரை குறைந்தது.

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுக்கு பிறகு, போர் பதற்றம் சற்று குறைவாக தெரிந்த நிலையில், தங்கம் விலை குறைந்தது. ஆனால் நேற்று முன்தினம் முதல் மீண்டும் தங்கம் விலை ஏறுமுகத்தை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.480-ம் அதிகரித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக நேற்றும் சவரனுக்கு ரூ.560-ம் உயர்ந்து ஒரு சவரன் ரூ.56 ஆயிரத்து 520-க்கும் விற்பனை ஆனது.

இந்த நிலையில் இன்றும் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. கிராமுக்கு 50 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ. 7,115-க்கும் சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 56,920-க்கும் விற்பனையாகிறது.

# காரைக்குடி அருகே கோவில் நிர்வாகி வீட்டின் பூட்டை உடைத்து 100 சவரன் நகை, பணம் கொள்ளை



சென்னை, 22 நவம்பர் 2024: சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கருவியபட்டியில் 100 சவரன் நகைகள், வெள்ளி பொருட்கள் மற்றும் ரூ.50,000 பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

காரைக்குடி அருகே கருவியப்பட்டியில் முத்து மாரியம்மன் கோயில் நிர்வாக தலைவர் சேதுராமன் என்பவர் வீட்டில் யாரும் இல்லாததை அறிந்த மர்மநபர்கள் நள்ளிரவில் வீட்டின் பூட்டை உடைத்து கோயில் மற்றும் வீட்டு நகைகள் 100 சவரன், வெள்ளி பொருட்கள் மற்றும் ரூ.50,000 கொள்ளையடிக்கப்பட்டது.

மேலும் சேதுராமன் வீட்டருகே இருந்த மணிகண்டன் வீட்டிலும் பூட்டை உடைத்து மர்மநபர்கள் நகை, பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொள்ளை குறித்து பள்ளத்தூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கோவில் நிர்வாகி வீட்டில் இருந்து கோவில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# “சம்பந்தி ஹீரோ.. மாப்பிள்ளை டைரக்டர்” ; ராஜா கிளி விழாவில் ஆக்சன் கிங் அர்ஜுன் கலாட்டா “வினோதய சித்தம் இல்லை என்றால் இந்த ராஜ கிளி இல்லை” ; தம்பி ராமையா




சென்னை, 22 நவம்பர்: மிக மிக அவசரம், மாநாடு படங்களின் வெற்றியை தொடர்ந்து தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி இருக்கும் படம் ‘ராஜா கிளி’. கதை, வசனம், பாடல்கள், இசையமைப்பு என நடிகரும் இயக்குநருமான தம்பி ராமையாவின் கைவண்ணத்தில் உருவாகி இருக்கும் இந்த படத்தின் மூலம் அவரது மகனான நடிகர் உமாபதி ராமையா இயக்குநராக அறிமுகம் ஆகிறார். தம்பி ராமையா இந்த படத்தில் கதாயின் நாயகனாக நடிக்க அவரது வெற்றி கூட்டணியாக வலம் வரும் நடிகர் சமுத்திரக்கனி இந்த படத்தில் இன்னொரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஸ்வேதா, சுபா, பிரவீன், முபாஸிர், இயக்குநர் மூர்த்தி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

வரும் டிசம்பர் 13-ஆம் தேதி இந்த படம் திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது. இதனை தொடர்ந்து இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று சென்னை சாலிகிராமம் பிரசாத் லேபில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தயாரிப்பாளர் சத்யஜோதி தியாகராஜன் மற்றும் நடிகர் ஆக்சன் கிங் அர்ஜுன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இயக்குநர் உமாபதி ராமையா பேசும்போது, “இந்த படத்திற்கு இயக்குநராக நான் வந்ததே ஒரு விபத்து என்று தான் சொல்லலாம். சுரேஷ் காமாட்சி சாரை பொருத்தவரை திறமையானவர்களை சரியாக தேர்ந்தெடுப்பார். இந்த படத்தின் படப்பிடிப்பு தொடங்கி நடைபெற ஆரம்பித்த சமயத்தில் தான் சுரேஷ் காமாட்சி சார் என்னை அழைத்து தன்னம்பிக்கை அளித்து இயக்குநராக ஆக்கினார். இந்த படத்தில் நடித்த அனைத்து நடிகர்களுக்குமே எனது தன்ஹை தனித்தனியாக ஒரு பாடி லாங்குவேஜை உருவாக்கி கொடுத்து விட்டார். அதனால் எனக்கு படப்பிடிப்பில் எளிதாக இருந்தது. கிட்டத்தட்ட 80 சதவீதம் அவர் பண்ணிவிட்டார். ஆனால் திரைக்கதையில் அப்பா, சுரேஷ் காமாட்சி இருவரும் எனக்கு சுதந்திரம் கொடுத்தார்கள். சமுத்திரக்கனி அண்ணனுக்கும் எனக்கும் இருப்பது ரொம்ப வித்தியாசமான ஒரு பிணைப்பு. என் அப்பா அவரை தம்பி என்று அழைப்பார் நான் அவரை அண்ணன் என்று அழைப்பேன். என் திருமணம் முதற்கொண்டு எல்லா நிகழ்ச்சிகளிலும் அவர் எனக்கு பக்கபலமாக இருந்திருக்கிறார். கிளைமாக்ஸ்சில் ஒரு உணர்ச்சிப்பூர்வமான காட்சியை படமாக்கிய போது மீண்டும் ஒரு டேக் எடுக்க கேட்கலாமா என தயங்கினேன். ஆனால் சமுத்திரக்கனி அண்ணன் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் மீண்டும் அனைவரையும் தயார்படுத்தி அதை காட்சியை அற்புதமாக நடித்துக் கொடுத்தார். மற்ற நடிகர்கள் நடிப்பதற்கான வாய்ப்பை அழகாக ஏற்படுத்திக் கொடுப்பார். தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவருமே ஒரு புது இயக்குநராக எனக்கு ரொம்பவே ஒத்துழைப்பு கொடுத்தார்கள். இந்த படத்தில் அப்பாவை வித்தியாசமான மனிதராக பார்ப்பீர்கள். எல்லோருக்கும் அப்பாதான் ஹீரோ என்பார்கள். என் படத்திலேயே அப்பாதான் ஹீரோ எனும் போது அவரை வைத்து கொஞ்சம் ஏதாவது புதுசாக செய்ய ஆசைப்படுவது இயல்பு தானே. சின்ன முள்ளூ பாடலில் என் தந்தைக்கு ஒஸ்தியில். சிம்பு ஆடிய நடன அசைவுகளை தான் முயற்சி செய்தோம். ஆனால் அவர் புதிதாக ஒன்று செய்தார். காலை விரித்து நடனம் ஆடுவதற்காக தரையில் எண்ணெய் எல்லாம் ஊற்றி அவரை ஆட வைத்தோம். அடுத்து அவரே எங்கே எண்ணெய் கொண்டு வாருங்கள் எனக் கேட்க ஆரம்பித்து விட்டார். நல்ல படம் கொடுத்து இருக்கிறோம். இதயத்தில் இருந்து எடுத்துச் செல்வது போல ஒரு நல்ல கருத்தையும் இதில் சொல்லி இருக்கிறோம்” என்று கூறினார்.

கதையின் நாயகன் தம்பி ராமையா பேசும்போது, “எனது மகன் அறிமுகமாக இயக்குநராக அறிமுகமாகும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு எம்ஜிஆர் ஆகவும் ஆர்எம் வீரப்பனாகவும் என எல்லாமாக வந்திருக்கும் சத்யஜோதி தியாகராஜன் அவர்களுக்கு நன்றி. நான் சந்தித்த பல தொழிலதிபர்களிடம் உரையாடிய போது மனிதரில் புனிதராக இருக்கக்கூடிய ஒரே ஒரு ஆத்மா அவர் வாழ்ந்த வாழ்க்கையை ஒட்டுமொத்த ரகசியத்தை ஒரு பச்சை குழந்தை போல என்னிடம் கொட்டி தீர்த்தார். அதை எப்படியாவது வெளிப்படுத்த வேண்டுமே என நினைத்தபோது அதற்கு எனக்கு உருவம் கொடுத்தது என்றால் சமுத்திரக்கனி தான். சினிமாவில் பல பேர் என்னை பயன்படுத்துவார்கள்.. பயணம் செய்வார்கள்.. ஆனால் சமுத்திரக்கனி மட்டும்தான் என்னை பயன்படுத்தி பயணம் செய்து பக்கத்திலும் இருப்பவர். என் வீட்டில் யாராவது ஏதாவது என்னை சொன்னால் கூட என் தம்பி சமுத்திரக்கனி இருக்கிறான்.. அவனிடம் சென்று விடுவேன் என்று கூறி தான் அனைவரையும் மிரட்டி வருகிறேன். நான் குணச்சித்திர நடிகர் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் வினோதய சித்தம் என்கிற படத்தை எனக்காகவே உருவாக்கி, போகிற, வருகிற இடங்களில் எல்லாம் என்னை கொண்டாட வைத்தார். அவர் என்னை வைத்து வினோதய சித்தம் என்கிற படத்தை உருவாக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக இந்த ராஜா கிளியை என்னால் உருவாக்கியிருக்க முடியாது. எல்லா நேரத்திலும் பசிக்கு அடுத்தவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ? நமக்கு தேவையான போது நாமும் சமைக்க வேண்டும் தானே ? அப்படி தான் இந்த கதையை சமைத்தேன்.

உயரத்தில் இருக்கும் பல பேர் இன்று துயரத்தில் தான் இருக்கிறார்கள். அந்த வகையில் இந்த கதை எதையும் உணர்த்தாது. உணர வைக்க செய்யும். படத்தின் கதையை உருவாக்கியபோது நான் தான் இதை இயக்குவேன் என சொல்லிக்கொண்டு இருந்தேன். ஆனால் நானே நடித்துக் கொண்டு இயக்குநராக இருப்பது சரி வருமா என நினைத்து உமாபதியை இந்த படத்தை இயக்கும்படி கூறினேன். ஆனால் அவர் தயங்கினார். உடனே சுரேஷ் காமாட்சி அவரை அழைத்து நீ தான் படத்தை இயக்க வேண்டும் என்று இயக்குநராக கொண்டு வந்திருக்கிறார். ஐஸ்வர்யா எங்கள் வீட்டிற்கு மருமகளாக வந்தது காலம் எங்களுக்கு கொடுத்த கொடை. புரட்சித்தலைவி ஜெயலலிதா அம்மாவிற்கு பிறகு ஆறேழு மொழிகளில் பேசக்கூடிய வல்லமை கொண்டவர் அவர். சீதா பயணம் என்கிற பிரமாண்ட படைப்பை தனது மகளுக்காக அர்ஜுன் சார் எடுத்திருக்கிறார். இந்த ராஜா கிளி திரைப்படம் ஒரு கூண்டுக்கிளியாக இருந்தது. இப்போது வெளியே வந்து பறக்க இருக்கிறது.. சத்யஜோதி தியாகராஜன் சார் சொன்னது போல, அது தங்க கிளியாக வெளிவர பிரார்த்தனை செய்து கொள்கிறேன். எனக்கும் அரவிந்தசாமிக்கும் என்ன பெரிய வயது வித்தியாசம் ? ஆனால் அவருக்கு தந்தையாக நடிக்கும் தன்னம்பிக்கை எனக்கு இருந்தது. அதேபோல இந்த படத்தில் என்னுடன் நடித்த கதாநாயகிகளும் அது போன்ற தன்னம்பிக்கையுடன் தான் நடித்தார்கள்” என்றார். தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி பேசும்போது, “தம்பி உமாபதி சுய ஒழுக்கம் உள்ள ஒரு இளைஞர். அவருக்கு ஒரு காதல் இருந்தது என்பதெல்லாம் அப்புறம்தான் எனக்கு தெரியவந்தது. ஆனால் அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தை வைத்து அது ஐஸ்வர்யா தான் கண்டுபிடித்து விட்டேன். இந்த படத்தில் முதல் கட்ட படப்பிடிப்பிற்காக கிளம்பி சென்றார்கள். அப்போது நான் கவனித்த விஷயம் என்னவென்றால் இந்த படத்திற்கான ஆய்வுகளை எல்லாம் செய்தது உமாபதி தான். அதன் பிறகு தான் தம்பி ராமையா அண்ணனை அழைத்து நீங்கள் நடிக்கிறீர்கள், பாட்டு எழுதுகிறீர்கள், இசையும் அமைக்கிறீர்கள்.. அதனால் உமாபதி டைரக்ட் பண்ணட்டுமே என்று கூறினேன். அதை பெருந்தன்மையாக அவர் எடுத்துக் கொண்டார்.

இந்த படம் தான் உமாபதிக்கு உச்சம் என சொல்ல மாட்டேன். இதுவும் ஒரு படம். ஆனால் அவரிடம் இன்னும் அதிக படைப்புத்திறமை ஒளிந்திருக்கிறது. அதற்கான படம் நிச்சயமாக அடுத்த அமையும் என நம்புகிறேன். மாநாடு படத்தின் படப்பிடிப்பில் ஒளிப்பதிவாளர் ரிச்சர்டிடம் உதவியாளராக பணியாற்றிய கேதரின் சுறுசுறுப்பும் திறமையும் எனக்கு ரொம்பவே பிடித்திருந்தது. உமாபதியின் வயசுக்கு அவர் சரியாக செட்டாவார் என முடிவு செய்து அவர்கள் இருவரையும் இணைத்து விட்டேன். இயக்குனர் மணிவண்ணன், ராம் ஆகியோருக்கு அடுத்ததாக நான் வியந்தது தம்பி ராமையாவை பார்த்து தான். ஸ்கிரிப்டை கையில் வைத்துக்கொள்ளவே மாட்டார். வசனம் அது பாட்டுக்கு கொட்டும். அது அவரே எழுதியதால் மனதில் ஊறி போய்விட்டது. மாநாடு சமயத்தில் எனக்கு போன் செய்து வாழ்த்தியது இரண்டு நடிகர்கள் மட்டுமே ஒருவர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். இன்னொருவர் இயக்குனர் சமுத்திரக்கனி. அதன் பிறகு சோசியல் மீடியாக்களில் கூட அவரை சமூக கருத்து சமுத்திரக்கனி என்று சொல்வதை பார்த்திருக்கிறேன் எல்லோராலும் அப்படி கருத்து சொல்லி விட முடியாது. கருத்து சொல்வதற்கு என்று ஒரு தனித்தன்மை வேண்டும். மிஸ்கின் சமுத்திரக்கனி இருவருமே உள்ளுக்குள் ஒரு குழந்தை மாதிரி. சமீபத்தில் என்னை கவர்ந்த இருவர் இவர்கள்தான். தம்பி ராமையா தான் கதாநாயகன் என தெரிந்தும் நடிக்க ஒப்புக்கொண்ட சுவேதா, சுபா இருவருக்கும் நன்றி. எப்போதும் ஸ்கிரிப்ட்டை தான் நம்பி நடிக்க வேண்டும்.

நம் பக்கத்தில் இருப்பவர்களின் அருமை நமக்கு பெரும்பாலும் தெரியாது. அப்படித்தான் என் அலுவலகத்தில் பணி புரியும் பிரவீன் இவ்வளவு நடிப்பான் என தெரியாது. நம் கூட இருப்பவர்கள் அடுத்த லெவலுக்கு வளரும் போது அதில் ஒரு சந்தோஷம் கிடைக்கிறது. என்னுடைய அன்பு தம்பி கிரிஷ்ஷை அருமையான பாடகராக பார்த்திருப்பீர்கள். இந்த படத்தில் ஒரு அற்புதமான நடிகராக மாறி இருக்கிறார். ரகுவரனின் இன்னொரு வெர்ஷனாக அவரை பார்ப்பீர்கள். அவரது மனைவி சங்கீதாவிடம் இவர் சிறப்பாக நடித்திருப்பதாக சொன்னால் நம்பவே மாட்டேன் என்றார். படம் எடுப்பது மட்டுமே எங்களது வேலை. அது நல்ல படமா இல்லையா என்பதை அதன் வெற்றி மட்டும் தான் தீர்மானிக்கிறது. அதன் பட்ஜெட் தீர்மானிக்காது. இந்த படம் ஒரு மனிதனின் வாழ்வியல். இது மற்றவர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும். இந்த படத்தை நவ-29ல் தான் வெளியிடலாம் என இருந்தோம். ஆனால் புஷ்பா 2 ரிலீஸ் காரணமாக இப்போது டிசம்பர் 13ல் வெளியிட முடிவு செய்துள்ளோம்” என்றார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## சாம்சங் ஆர்&டி நிறுவனம், நொய்டா மற்றும் ஐ ஐ டி பாம்பே உடன் டிஜிட்டல் ஆரோக்கியம், ஏ ஐ மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் முன்னோடித்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது



கோயம்புத்தூர், 22 நவம்பர்: சாம்சங் ஆர்&டி நிறுவனம், நொய்டா (எஸ் ஆர் ஐ-நொய்டா), இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி பாம்பே உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன் மூலம் தொழில்துறை-கல்வி ஒத்துழைப்புக்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்தியுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், ஸ்ரீ-நொய்டா மற்றும் ஐ ஐ டி பாம்பே செயற்கை நுண்ணறிவு (ஏ ஐ), டிஜிட்டல் ஹெல்த் மற்றும் பிற முக்கியமான பகுதிகளில் முன்னேற்றங்களை ஆராயும். ஐந்தாண்டு கால கூட்டாண்மை கூட்டு ஆராய்ச்சி திட்டங்களை எளிதாக்கும், ஐ ஐ டி பாம்பே மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சாம்சங் பொறியாளர்களுடன் ஒத்துழைக்க வாய்ப்பளிக்கும்.

இந்த அணுகுமுறை மாணவர்களுக்கு புதிய வழிகளைத் திறப்பது மட்டுமல்லாமல், அவர்களின் தொழில்துறையின் தயார்நிலையை மேம்படுத்தும். கூடுதலாக, இது சாம்சங் பொறியாளர்களுக்கு ஐ ஐ டி பாம்பேயிலிருந்து டிஜிட்டல் ஹெல்த் மற்றும் ஏ ஐ போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் சிறப்புப் பயிற்சி மற்றும் சான்றிதழ் திட்டங்களுடன் சித்தப்படுத்துகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எஸ் ஆர் ஐ-நொய்டாவின் நிர்வாக இயக்குனர் கியுங்யுங் ராவ் மற்றும் ஐ ஐ டி பாம்பேயின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இணை டீன் பேராசிரியர் உபேந்திர வி. பண்டார்கர் ஆகியோர் முறைப்படி கையெழுத்திட்டனர். ஐ ஐ டி பாம்பேயில் நடந்த நிகழ்ச்சியில், கோயிடா சென்டர் ஃபார் டிஜிட்டல் ஹெல்த் (கேசி டி எச்) ஆசிரிய உறுப்பினர்கள், கேசி டி எச் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பதின்ஹடேரி, பேராசிரியர் நிர்மல் பஞ்சாபி மற்றும் டாக்டர் ராகவேந்திரன் லக்ஷ்மிநாராயணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

"இந்த ஒத்துழைப்பு தொழில்துறை நிபுணத்துவம் மற்றும் கல்விசார் சிறப்பு ஆகியவற்றின் சக்திவாய்ந்த கலவையாகும், இது முன்னோடி ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் திறமை மேம்பாட்டிற்கான கதவுகளைத் திறக்கிறது. ஐ ஐ டி-பா இன் விதிவிலக்கான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற நாங்கள் எதிர்நோக்குகிறோம், அர்த்தமுள்ள முன்னேற்றங்கள் மற்றும் டிஜிட்டல் ஹெல்த் துறையில் நிஜ உலக சவால்களை எதிர்கொள்ளும் தீர்வுகளை உருவாக்க, ஏ ஐ மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள். ஒன்றாக, எங்கள் அமைப்பு மற்றும் சமூகம் ஆகிய இரண்டிற்கும் பயனளிக்கும் அறிவு-பகிர்வு மற்றும் கண்டுபிடிப்புகளின் சுற்றுச்சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்," என்று எஸ் ஆர் ஐ-நொய்டாவின் நிர்வாக இயக்குனர் கியுங்யுன் ரூ கூறினார்.

''எஸ் ஆர் ஐ-நொய்டாவுடனான எங்கள் கூட்டாண்மையை நாங்கள் முறைப்படுத்துவது இன்று ஒரு அற்புதமான மைல்கல்லைக் குறிக்கிறது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், புத்தாக்கம், அறிவுப் பரிமாற்றம் மற்றும் சிறப்பைப் பின்தொடர்வதற்கான நமது பகிரப்பட்ட உறுதிப்பாட்டை முன்வைக்கிறது. ஒன்றாக வேலை செய்வதன் மூலம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தொழில்துறையில் ஈடுபட புதிய பாதைகளை உருவாக்குகிறோம், ஆராய்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்துகிறோம் மற்றும் எங்கள் சமூகங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கிறோம்," என்கிறார் ஐ ஐ டி பாம்பேயின் அசோசியேட் டீன் (ஆர்&டி) பேராசிரியர் உபேந்திர வி. பண்டார்கர் அவர்கள் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கூட்டு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதை ஊக்குவிக்கிறது, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் தொழில் சார்ந்த புதுமைகளை ஊக்குவிக்கும் அறிவுப் பகிர்வை ஊக்குவிக்கிறது. இந்த கூட்டாண்மை மூலம், சாம்சங் மற்றும் ஐ ஐ டி பாம்பே ஆகியவை நிபுணத்துவத்தின் நிலையான பரிமாற்றத்திற்கான அடித்தளத்தை அமைக்கின்றன, இது அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களின் எல்லைகளைத் தள்ளும் மற்றும் எதிர்கால முன்னேற்றங்களை ஊக்குவிக்கும்.

## எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின் "சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் மற்றும் ரெஜிஸ்டர்ட் ஆஃபீஸ் " சென்னையில் புதிய முகவரிக்கு மாற்றப்பட உள்ளது

SMFG
India Credit
Pragati Ki Nayi Pehchaan

சென்னை, 22 நவம்பர்: எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம், சென்னை போரூரில் உள்ள காமர்ஸ்சோன் ஐடி பார்க் இல் தனது 'சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்' துவக்கம் மூலம் ஒரு இலட்சிய வளர்ச்சிப் பயணத்தைத் தொடங்கியுள்ளது.

இந்த மூலோபாய நடவடிக்கையானது, நிர்வாக மற்றும் மத்திய அலுவலக செயல்பாடுகளுக்கு ஒரு மூலோபாய மையப்படுத்தப்பட்ட இடத்தை நிறுவுகின்ற வகையில் எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின் தமிழ்நாட்டில் உள்ள விரிவாக்கத் திட்டங்களுடன் தடையின்றி இணைகிறது. இந்த சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் மற்றும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், இணைந்து பணியாற்ற அவர்களுக்கு உதவவும், புதிய செயல்முறைகளை நடைமுறையில் கொண்டுவரவும், அவர்களின் பொறுப்புக்களில் சிறப்பாக செயல்படவும் மக்களுக்கு அதிகாரமளிக்கின்ற எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின், நெறிமுறைகளை ஊக்குவிக்கும். அதன் அதிநவீன உள்கட்டமைப்பு மற்றும் பரந்த அளவிலான சேவைகளுக்கு அருகாமையில், சுமார் 70,000 சதுர அடி பரப்பளவில் புதிய, அதிநவீன அலுவலக இடம், 700க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு சிறந்த பணிச்சூழலை வழங்கும். ஏறக்குறைய 70,000 சதுர அடி பரப்பளவு முழுவதும் பரவியுள்ள அதிநவீன உள்கட்டமைப்பு மற்றும் ஒரு எண்ணற்ற வசதிகளுக்கான அணுகல் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் இந்த புதிய அதிநவீன அலுவலக இடம், 700க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு ஒரு விதிவிலக்கான பணிச்சூழலை வழங்கும். இந்த இடமாற்றம், ஒரு சாதகமான பணிச்சூழலை உருவாக்குவதற்கும் ஊழியர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்குமான இந்த நிறுவனத்தின் அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. சுவாமிநாதன் சுப்ரமணியன் கூறுகையில், "இந்த புதிய சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் மற்றும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்துடன், எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் சென்னையில் உள்ள சிறந்த திறமையாளர்களை ஈர்க்கவும், வளர்க்கவும் தயாராக உள்ளது, இவ்வாறு அதன் பணியாளர்களை வலுப்படுத்தி நிதிச் சேவைத் துறையில் ஒரு முக்கிய வீரராக தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. இந்த இடமாற்றமானது, புவியியல் விரிவாக்கத்தைக் குறிப்பது மட்டுமல்லாமல், அதன் வளர்ச்சி மூலோபாயத்தின் ஒருங்கிணைந்த கூறுகளாக திறமையாளர்களை பணியமர்த்துதல் மற்றும் தக்கவைத்தல் ஆகியவற்றில் இந்த நிறுவனத்தின் கவனத்தை முக்கியப்படுத்திக் காட்டுகிறது. இது ஊழியர்களுக்கு, இணைந்து பணியாற்றவும், சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றவும், புதிய செயல்முறைகளுடன் தங்களைத் தாங்களே புதுப்பித்துக்கொள்ளவும், அவர்களின் நிபுணத்துவப் பகுதியை விரிவுபடுத்தவும், அவர்களின் பொறுப்புகளில் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படவும் அதிகாரமளிக்கும், இவ்வாறு சிறந்து விளங்க பாடுபடுகிறது." என்று கூறினார். நாடு முழுவதும் அதன் இருப்பை வளர்ப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்ற வகையில் எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம், தனது 1000வது கிளையை செப்டம்பர் 2024ல் துவக்கியதை அடுத்து, சென்னையில் புதிய சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் மற்றும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் திறக்கப்பட இருக்கின்றது. சென்னை பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: காமெர்ஸோன் ஐடி பார்க், டவர் பி, 1 வது ஃப்ளோர், எண் 111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை - 600116.

## பொங்கல் பண்டிகை வெளியீடாக ஜன-10ல் வெளியாகும் 'வணங்கான்'



சென்னை, 22 நவம்பர்: சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் மற்றும் இயக்குநர் பாலாவின் 'பி ஸ்டுடியோஸ்' இணைந்து தயாரிக்க பாலாவின் இயக்கத்தில் உருவாகி வரும் படம் 'வணங்கான்'. அருண்விஜய் கதாநாயகனாக நடிக்க கதாநாயகியாக ரோஷினி பிரகாஷ் நடிக்கிறார். முக்கிய வேடங்களில் சமுத்திரக்கனி, மிஷ்கின், ராதாரவி, ஜான் விஜய், ரவிமரியா, சிங்கம்புலி, அருள்தாஸ் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

பாடல்களுக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க பின்னணி இசையை சாம் சி.எஸ் மேற்கொள்கிறார். பாடல்களை கவிப்பேரரசு வைரமுத்து எழுதுகிறார். ஒளிப்பதிவை ஆர்.பி.குருதேவ் மேற்கொள்ள படத்தொகுப்பை சதீஷ் சூர்யா கவனிக்கிறார். கலை இயக்குனராக ஆர்.பி.நாகு பொறுப்பேற்றுள்ளார். ஆக்சன் காட்சிகளை ஸ்டண்ட் சில்வா வடிவமைத்துள்ளார்.

'மாநாடு' என்கிற பிளாக் பஸ்டர் வெற்றி படத்தை தொடர்ந்து வி ஹவுஸ் நிறுவனம் தயாரிக்கும் படம் என்பதுடன், இயக்குநர் பாலாவின் இயக்கத்தில் ஆறு வருட இடைவெளிக்கு பிறகு வெளியாகும் படம் என்பதாலும் இந்தப்படம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே ரசிகர்களிடம் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வந்தது.

அதுமட்டுமல்ல, "படப்பிடிப்பின் பொழுது கூட இக்கதையின் பாதிப்பை நான் முழுமையாக உணரவில்லை. ஆனால் அதனை இப்பொழுது வெள்ளித்திரையில் காண்கையில், என் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. எனது திரையுலக பயணத்தில், 'வணங்கான்' ஒரு மிக முக்கியமான பாகமாக அமையும் என்பதில் எனக்கு துளி அளவும் சந்தேகமில்லை" என சமீபத்தில் நாயகன் அருண்விஜய் நெகிழ்ந்து போய் கூறியது இன்னும் படத்தின் மீதான ஆர்வத்தை அதிகப்படுத்தவே செய்கிறது.

ஏற்கனவே 'வணங்கான்' படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் டீசர் ஆகியவை வெளியாகி ரசிகர்களிடம் வரவேற்பை வரவேற்பை பெற்றுள்ளன.

இந்நிலையில் 'வணங்கான்' திரைப்படம் வரும் பொங்கல் பண்டிகை வெளியீடாக ஜன-10 2025 ஆம் தேதி முதல் திரையரங்குகளில் ரிலீஸாக இருக்கிறது என்கிற அதிகாரப்பூர்வ தகவலை வெளியிட்டுள்ளார் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி. படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மக்கள் தொடர்பு ; ஏ. ஜான்

## கோல்கேட்டின் வாய்வழி சுகாதார இயக்கம் மில்லியன் கணக்கான இந்தியர்களுக்கு ஏ ஐ-இயக்கப்படும் தனித்துவமான பல் பரிசோதனை மூலம் அதிகாரம் அளிக்கிறது




சென்னை, 22 நவம்பர்: இந்தியாவின் வாய்வழி சுகாதார பயணத்தை வெல்வதற்கான அதன் பணியின் ஒரு பகுதியாக, நாட்டின் முன்னணி வாய்வழி பராமரிப்பு பிராண்டான கோல்கேட்-பாமோலிவ் (இந்தியா) லிமிடெட், அதன் உருமாறும் வாய்வழி சுகாதார இயக்கத்தைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது. இந்த தனித்துவமான செயற்கை நுண்ணறிவு-இயக்கப்பட்ட முன்முயற்சி இந்தியர்களை தங்கள் வாய்வழி சுகாதார முன்னுரிமை அளிக்க ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் இந்தியாவில் வாய்வழி சுகாதாரத்தின் விழிப்புணர்வு மற்றும் அணுகலுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்க தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறது. சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் அறிவியல் தலைமையிலான கண்டுபிடிப்புகள் மூலம் இந்தியாவின் வாய்வழி சுகாதார நிலையை உயர்த்துவதற்கான கோல்கேட்டின் உறுதிப்பாட்டுடன் இந்த முயற்சி ஒத்துப்போகிறது, வாய்வழி பராமரிப்பை நாட்டின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு குறிப்பிடத்தக்க முன்னுரிமையாகவும் பங்களிப்பிர்க்கு வழிவகுக்கிறது . இந்த இயக்கத்தின் மையத்தில் லாகி.ஏ ஐ உடன் இணைந்து உருவாக்கப்பட்ட ஏ ஐ பல் ஸ்கிரீனிங் கருவி உள்ளது, இது வடிக்கையாலரகள் ஒரு எளிய வாட்ஸப் தொடர்பு மூலம் உடனடி ஏ ஐ உருவாக்கப்படும் பல் ஸ்கிரீனிங் அறிக்கையைப் பெற அனுமதிக்கிறது. 9 முன்னணி இந்திய மொழிகளில் கிடைக்கிறது, சமீபத்திய கோல்கேட் தயாரிப்பு பேக்குகளில் உள்ள கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமோ அல்லது 8806088060 என்ற எண்ணை டயல் செய்வதன் மூலமோ, சில கேள்விகளுக்குப் பதிலளித்து, இலவச ஏ ஐ-இயங்கும் பல் பரிசோதனை அறிக்கையைப் பெற, தங்கள் வாயின் மூன்று படங்களைப் பதிவேற்றி எவரும் பங்கேற்கலாம்.

மேலும், இந்த இயக்கத்தை ஆதரிப்பதற்காக 50,000 பல் மருத்துவர்களின் வலையமைப்பை செயல்படுத்தவும், கருவி அடிப்படையிலான திரையிடலுக்குப் பிறகு மக்களுக்கு இலவச பல் மருத்துவர் ஆலோசனைகளை வழங்கவும் கோல்கேட் இந்திய பல் சங்கத்துடன் (ஐ டி ஏ) உடன் சேர்ந்துள்ளது. பரவலான அணுகலை உறுதி செய்வதற்காக, இந்தியாவின் பல நகரங்களில் சில்லறை கடைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட்டுகள் போன்ற பல உள்ளடக்குவதை இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த இயக்கம் குறித்து கருத்து தெரிவித்த கோல்கேட்-பாமோலிவ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பிரபா நரசிம்மன், "இந்தியாவில் உள்ள அனைவரின் வாய்வழி சுகாதார மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். இது நமது அடிப்படை பொறுப்பு மற்றும் மிகப்பெரிய பாக்கியமாகும். #கோல்கேட்ஓரல்ஹேல்த் மூவ்மெண்ட் இந்த நீண்ட கால உறுதிப்பாட்டை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு வாய்வழி சுகாதார அவசியம் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம், மேலும் எங்கள் ஏ ஐ-இயங்கும் வாய்வழி சுகாதார இயக்கத்தின் மூலம் விழிப்புணர்வையும் வாய்வழி பராமரிப்புக்கான அணுகலையும் ஜனநாயகப்படுத்துகிறோம் . இந்த நடவடிக்கை மில்லியன் கணக்கான இந்தியர்கள் தங்கள் சொந்த வீடுகளில் வசதியாக தங்கள் வாய்வழி சுகாதார பொறுப்பேற்க உதவும், மேலும் ஆரோக்கியமான மக்களுக்கும் ஆரோக்கியமான தேசத்திற்கும் வழி வகுக்கும். வாய்வழி சுகாதாரம் அவர்களின் ஒட்டுமொத்த சுகாதார மையத்தின் ஒரு பகுதியாக மாற்ற மில்லியன் கணக்கான இந்திய வீடுகளை அடைய எங்களுக்கு உதவிய எங்கள் பாங்குதராருக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்".

நிறுவனத்தின் முதன்மையான கல்வித் திட்டமான கோல்கேட் பிரைட் ஸ்மைல்ஸ், பிரைட் ஃபியூச்சர்ஸ் (பி எஸ் பி எஃப்) இந்தியாவில் வலுவடைந்து, 1976 முதல் 180 மில்லியனுக்கும் அதிகமான பள்ளிக் குழந்தைகளை சென்றடைந்துள்ளது. இந்த திட்டம் சரியான வாய்வழி பராமரிப்பு பழக்கம், புகையிலை தடுப்பு பற்றிய விழிப்புணர்வு மற்றும் நல்ல ஊட்டச்சத்தின் தேவை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்த ஆண்டு, பி எஸ் பி எஃப் திட்டம் உத்தரபிரதேசம் மற்றும் கோவா மாநில அரசுகளுடன் இணைந்து குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியது, இந்த முதன்மை பள்ளியின் அணுகலை விரிவுபடுத்துவதற்காக, உத்தரபிரதேசத்தில் 2 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் மற்றும் கோவாவில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளிடையே வாய்வழி சுகாதார விழிப்புணர்வை சாதகமாக பாதிக்கும்.

90% இந்தியர்கள் வாய்வழி சுகாதார பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர்* ஆனால், நகர்ப்புற இந்தியர்களில் 80% பேர் தினமும் இரண்டு முறை பல் துலக்குவதில்லை, மேலும் 9% பேர் ஒரு வருடத்தில் பல் மருத்துவரை சந்திக்கின்றனர்.

2023 ஆம் ஆண்டில் கோல்கேட் மற்றும் காந்தார் நடத்திய ஒரு விரிவான பான்-இந்தியா ஆய்வு, வாய்வழி சுகாதார முன்னுரிமை அளிப்பது ஏன் காலத்தின் தேவை என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஆய்வின் படி, தென்னிந்தியா தங்கள் வாய்வழி ஆரோக்கியத்தைப் பற்றி அதிக விழிப்புடன் இருக்கும்போது, ஒரு வருடத்தில் 9% பேர் மட்டுமே பல் மருத்துவரைப் பார்க்கிறார்கள், 14% பேர் பல் எதிர்கொள்கிறார்கள் கூட்டாண்மையின் சக்தியின் மூலம், கோல்கேட்டின் வாய்வழி சுகாதார இயக்கம் அதிகபட்ச தாக்கத்திற்கு ஒரு விரிவான வலையமைப்பைப் பயன்படுத்தும். இந்திய பல் சங்கத்துடனான (ஐ டி ஏ) கூட்டணியைத் தவிர, நிறுவனம் கணிசமான எண்ணிக்கையிலான சில்லறை வாடிக்கையாளர்கள், கல்வி நிறுவனங்கள், வீட்டுவசதி சங்கங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் பெருநிறுவனங்களுடன் இணைந்து இலவச பல் பரிசோதனைகளுக்காக செயல்படும். வாய்வழி சுகாதார இயக்கம் ஊடக பிரச்சாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, இது தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் தளங்களில் தொடங்கப்பட்டது, நாடு தழுவிய கள செயல்பாடுகள் மற்றும் செல்வாக்கு கூட்டாண்மை ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் பல் பரிசோதனைகளை எடுக்க மக்களை வலியுறுத்துகிறது. இந்த பன்முக அணுகுமுறையின் மூலம், கோல்கேட் மில்லியன் கணக்கான இந்தியர்களை சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தென் மாநிலங்கள் கணைய புற்றுநோய் வியாதிகளில் ஒரு தொடர்ந்த அதிகரிப்பைக் காண்கின்றபடியால் முன்கூட்டிய பரிசோதனை மற்றும் சிகிச்சையை மேற்கொள்ள நிபுணர்கள் பொதுமக்களை அறிவுறுத்துகின்றனர்ப்பு



சென்னை, 22 நவம்பர்: உலக கணையப் புற்றுநோய் தினத்தில், தென்னிந்தியா முழுவதும் கணைய புற்றுநோய் வியாதிகள் குறிப்பிடத்தக்க வகையில் தொடர்ந்து அதிகரித்து வருவதால், சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, கடந்த பத்தாண்டுகளில் தென் மாநிலங்களில் கணையப் புற்றுநோயின் பாதிப்பு 30% அதிகரித்துள்ளது, இந்தியாவில் ஆண்டுதோறும் 50,000 புதிய புற்றுநோய் வியாதியஸ்தர் கண்டறியப்படுகின்றனர். இந்த ஆபத்தான போக்கு, முன்கூட்டிய பரிசோதனை மற்றும் பயனுள்ள சிகிச்சை விருப்பங்களின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகின்ற வகையில் சுகாதார சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க சுமையை ஏற்படுத்துகிறது.

அதிக இறப்பு விகிதத்திற்கு அறியப்பட்ட கணைய புற்றுநோய், வயிற்று வலி, மஞ்சள் காமாலை மற்றும் விவரிக்க முடியாத எடை இழப்பு போன்ற நுட்பமான ஆரம்ப அறிகுறிகளால் பெரும்பாலும் ஒரு முற்றிய நிலையில் கண்டறியப்படுகிறது. நாள்பட்ட கணைய அழற்சி, புகைபிடித்தல், உடல் பருமன், நீரிழிவு நோய் மற்றும் கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட்டுகள் அதிகம் உள்ள உணவு உள்ளிட்ட தென்னிந்தியாவில் நிலவும் ஆபத்து காரணிகள் இந்த அதிகரித்து வரும் நிகழ்வுகளுக்கு பங்களிக்கின்றன. இந்த அவசர சுகாதார நெருக்கடிக்கு விடையிறுக்கும் வகையில், ஜிப்மர் இன் ஒரு முன்னணி ஆகியவற்றை வழங்கும் ஒரு புரட்சிகரமான ரோபோடிக் அறுவை சிகிச்சை நுட்பத்தை உருவாக்கியுள்ளார்.

இந்த புதிதாக தரப்படுத்தப்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சை நுட்பம், அறுவை சிகிச்சை நிபுணர்கள் சிக்கலான pancreaticoduodenectomy (PD) ஐ குறிப்பிடத்தக்க துல்லியத்துடன் செய்ய அனுமதிக்கின்ற அதிநவீன டா வின்சி ரோபோடிக் அமைப்பைப் பயன்படுத்துகிறது. முன்னணி ரோபோடிக் அறுவைசிகிச்சை நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த துல்லியமான மற்றும் முறையான வாஸ்குலர் கட்டுப்பாட்டு நுட்பம், கட்டியை முழுமையாக அகற்றுவதை உறுதி செய்கின்ற வகையில் இரத்த இழப்பைக் குறைக்கிறது மற்றும் R0 பிரித்தெடுத்தல் விகிதங்களை கணிசமாக மேம்படுத்துகிறது. டாக்டர் கலையரசன் இந்த நுட்பத்தின் நன்மைகளை வலியுறுத்திக் கூறும்பொழுது, "இந்த அணுகுமுறை சிக்கலான உடற்கூறியல் கட்டமைப்புகளுக்குள் இணையற்ற துல்லியத்துடன் வழிநடத்த எங்களை அனுமதிக்கிறது. கணைய புற்றுநோயால் கண்டறியப்பட்டவர்களுக்கு இந்த நுட்பத்தை ஒரு முக்கிய விருப்பமாக மாற்றுகின்ற வகையில் நோயாளிகள் குறைவான வலியை உணர்கின்றனர், மருத்துவமனை தங்குதலைக் குறைக்கிறது மற்றும் இருக்கின்ற சிக்கல்களின் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கிறது."என்றார்.

இந்த புதுமையான அணுகுமுறை உயிர்களைக் காப்பாற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளது, இது சமீபத்திய வழக்கு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நுட்பத்தின் உயிர் காக்கும் திறனை ஒரு சமீபத்திய நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. நாள்பட்ட கணைய அழற்சியின் பின்னணியில் மேம்பட்ட கணைய புற்றுநோயுடன் கண்டறியப்பட்ட ஒரு 58 வயதான நோயாளி ரோபோடிக் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார், இதன் விளைவாக முழுமையான கட்டி அகற்றப்பட்டது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த தொழில்நுட்பத்தின் உருமாறும் தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்ற துணையூக்கி கீமோதெரபியின் முன்கூட்டிய துவக்கத்தின் மூலம் இந்த நோயாளி வெறும் ஐந்து நாட்களுக்குள் வீடு திரும்ப முடிந்தது.

"இந்த உலக கணைய புற்றுநோய் தினத்தில், இந்த தீவிர நோய் மற்றும் அதை எதிர்த்துப் போராடும் புதுமையான தீர்வுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானதாக இருக்கிறது. ஜிப்மர் இல் ரோபோடிக் அறுவை சிகிச்சை மூலம் செய்யப்பட்ட முன்னேற்றங்கள், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஒரு நம்பிக்கையின் வழிகாட்டியாக விளங்குகிறது, இது தொடர்ந்த ஆராய்ச்சி, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட சிகிச்சை விருப்பங்களின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது" என்று டாக்டர் கலையரசன் மேலும் கூறினார்.

அண்டை மாநிலங்களில் இருந்து நோயாளிகளின் கணிசமான வருகையுடன், தென்னிந்தியாவில் உள்ள அரசு மருத்துவமனை சுற்றுச்சூழல் அமைப்பின் அடித்தளமாக ஜிப்மர் உள்ளது. சுற்றியுள்ள மாநிலங்களில் இருந்து ஒரு கணிசமான வருகையைக் காண்கின்ற ஜிப்மர் இந்தியாவின் தென் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை சுற்றுச்சூழல் அமைப்பின் அடித்தளமாக உள்ளது. ஜிப்மர் இல் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை நடைமுறைகளை மேற்கொள்ளும் நோயாளிகளில் சுமார் 60% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், 30% பேர் பிற தென் மாநிலங்களிலிருந்து வந்தவர்கள். சிக்கலான நோய்களைக் கையாளும் வசதி கொண்ட ஒரு மத்திய அரசு மருத்துவமனையாக இருப்பதால், ஜிப்மர் சுற்றியுள்ள நகரங்களில் இருந்து ஏராளமான பரிந்துரைகளைப் பெறுகிறது. இந்த மேம்பட்ட ரோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணைய புற்றுநோய்க்கான 100 அறுவை சிகிச்சைகளை இந்த மருத்துவமனை வெற்றிகரமாக செய்துள்ளது. இந்த மைல்கல் உயர்தர பராமரிப்புக்கான ஜிப்மர் இன் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது மற்றும் பிராந்தியத்தில் அதிநவீன புற்றுநோய் சிகிச்சையில் முன்னணியில் உள்ளது.

# தமிழக மீனவர்களிடம் பறிமுதல் செய்த படகுகள்: கடற்படை பயன்படுத்த இலங்கை அரசு உத்தரவு

சென்னை, 22 நவம்பர் 2024: தமிழக மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை இலங்கை கடற்படையினர் பயன்படுத்திக் கொள்ள அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர் சிறை பிடிப்பதும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர் கதையாகியுள்ளது. இதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் முன்னதாக பறிமுதல் செய்யப்படும் படகுகளை மீண்டும் மீனவர்களிடம் ஒப்படைக்கக் கோரியும் வலியுறத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு இலங்கை துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகளை பயன்படுத்துமாறு கடற்படைக்கு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

முதல் கட்டமாக மன்னாரில் இருந்து 5 படகுகள், யாழ்பாணத்தில் இருந்து 8 படகுகள் என மொத்தம் 13 படகுகள் இலங்கை கடற்படையின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. மேலும் மன்னார், மயிலட்டி துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள படகுகளை பயன்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இலங்கை அரசின் இந்த உத்தரவால், தமிழக மீனவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# என்விரோ இன்ஃப்ரா இன்ஜினியர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கல் நவம்பர் 22, 2024 அன்று திறக்கப்படும்

சென்னை, 22 நவம்பர்: என்விரோ இன்ஃப்ரா இன்ஜினியர்ஸ் லிமிடெட் (“என்விரோ இன்ஜினியர்ஸ்” அல்லது “தி கம்பெனி”), அதன் ஈக்விட்டி பங்குகளின் ஆரம்பப் பொது வழங்கல் தொடர்பாக, நவம்பர் 22, 2024 வெள்ளிக்கிழமை அன்று அதன் ஏலம் / வழங்கல் ஐத் திறக்கும்.

ஈக்விட்டி பங்குகளின் இந்த மொத்த வழங்கல் அளவு (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ. 10) 3,86,80,000 வரையிலான ஈக்விட்டி பங்குகளின் புதிய வெளியிடு ("புதிய வெளியீடு") மற்றும் 52,68,000 ஈக்விட்டி பங்குகள் வரையிலான விற்பனைக்கான வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கியது. ("விற்பனைக்கான வழங்கல்").

இந்த வழங்கல் தகுதியான பணியாளர்களால் செய்யப்படும் சந்தாவிற்கு 1,00,000 ஈக்விட்டி பங்குகள் வரையிலான ஒரு ஒதுக்கீட்டை உள்ளடக்கியது. (“பணியாளர் ஒதுக்கீட்டுப்பகுதி”)

ஆங்கர் முதலீட்டாளர் ஏல தேதி வியாழக்கிழமை, நவம்பர் 21, 2024. இந்த ஏலம்/வழங்கல் நவம்பர் 22, 2024 வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டு நவம்பர் 26, 2024 செவ்வாய்கிழமை முடிவடையும். (“ஏல விவரங்கள்”)

இந்த வழங்கலின் விலைவரம்பு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.140 முதல் ரூ. 148 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு குறைந்த பட்ச 101 ஈக்விட்டி பங்குகளுக்கும், அதன் பிறகு 101 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளிலும் ஏலம் எடுக்கலாம் (தி "பிரைஸ் பேண்ட்").

ஈக்விட்டி பங்குகளின் இந்த புதிய வெளியீட்டின் நிகர வருவாயை கீழ்க்கண்ட வகைகளில் பயன்படுத்த இந்த நிறுவனம் முன்மொழிகிறது:

(வீ) பணி மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய; (வீவீ) உத்திரபிரதேசத்தில் உள்ள மதுராவில் 'மதுரா கழிவுநீர் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் 60 எம்எல்டி எஸ்டிபி ஐ ஹைப்ரிட் ஆன்யூட்டி அடிப்படையிலான றிறிறி பயன்முறையின் மூலம் கட்டமைப்பதற்கு எங்கள் துணை நிறுவனமான ஈஐஈஎல் மதுரா இன்ஃப்ரா இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் ("ஈஐஈஎல் மதுரா") நிறுவனத்திற்கு நிதி உட்செலுத்துதல். (வீவீவீ) எங்கள் நிலுவையில் உள்ள சில கடன்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பிச் செலுத்துதல்/முன்கூட்டிச் செலுத்துதல்;

(வீஸ்) அடையாளம் காணப்படாத கையகப்படுத்துதல்கள் மற்றும் பொது நிறுவன நோக்கங்கள் மூலம் கனிம வளர்ச்சிக்கு நிதியளித்தல் ("வெளியீட்டின் நோக்கங்கள்").

சஞ்சய் ஜெயின் மூலம் செய்யப்பட்ட 21,34,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், மனிஷ் ஜெயின் மூலம் 21,34,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், ரிட்டு ஜெயின் மூலம் 5,00,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் மற்றும் ஷாச்சி ஜெயின் மூலம் 5,00,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் (ஒட்டுமொத்தமாக, "உருவாக்குனர் விற்பனை செய்யும் பங்குதாரர்கள்") மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் ஈக்விட்டி பங்குகளை விற்பனை செய்வதற்கான வழங்கல், ("விற்பனைக்கான வழங்கல்") ஆகியவற்றை இந்த 52,68,000 வரையிலான ஈக்விட்டி பங்குகளின் விற்பனைக்கான வழங்கல் (“வழங்கப்பட்ட பங்குகள்”) உள்ளடக்குகிறது.

நவம்பர் 16, 2024 தேதியிட்ட இந்த நிறுவனத்தின் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் இந்த ஈக்விட்டி பங்குகள் டெல்லியில் உள்ள ரெஜிஸ்ட்ரார் ஆஃப் கம்பெனீஸ் யிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (தி “ஆர்எச்பி”) இந்த ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்பட இருக்கும் இந்த ஈக்விட்டி பங்குகள், பங்குச் சந்தைகளான பிஎஸ்இ லிமிடெட் (“பிஎஸ்ஈ”) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (“பிஎஸ்ஈ” உடன் "என்எஸ்ஈ", “பங்குச் சந்தைகள்”) ஆகியவற்றில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளன. இந்த வழங்கலின் நோக்கங்களுக்காக, என்எஸ்ஈ என்பது நியமிக்கப்பட்ட பங்குச் சந்தையாகும். ("பட்டியலிடப்பட்ட விவரங்கள்").

செபி ஐசிடிஆர் ஒழுங்குமுறைகளின் 31வது விதிமுறையுடன் திருத்தப்பட்ட, 1957, செக்யூரிட்டி கான்ட்ராக்ட்ஸ் (ரெகுலேஷன்) விதிகளின் விதி 19(2)(தீ) இன் அடிப்படையில் புத்தக உருவாக்க செயல்முறை மூலம் இந்த வழங்கல் வழங்கப்படுகிறது. செபி ஐசிடிஆர் விதிமுறைகளின் விதிமுறை 6(1) க்கு இணங்க, புத்தக உருவாக்க செயல்முறை மூலம் இந்த வழங்கல் வழங்கப்படுகிறது, இதில் தகுதிவாய்ந்த நிறுவன வாங்குபவர்களுக்கு "கியூஐபிகள்" மற்றும் அத்தகைய பகுதி, ("கியூஐபி போர்ஷன்") விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய நிகர சலுகையில் 50%க்கு மேல் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு எங்கள் நிறுவனம் பி ஆர் எல் எம் உடன் கலந்தாலோசித்து, கியூஐபி வகையின் 60% வரை ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு, விருப்ப அடிப்படையில் ("ஆங்கர் முதலீட்டாளர் பகுதி") ஒதுக்கலாம். ஆங்கர் முதலீட்டாளர் பகுதியின் மூன்றில் ஒரு பங்கு ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்படும் விலைக்கு அல்லது அதற்கு மேல் உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளிலிருந்து பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளுக்காக ஒதுக்கப்படும். ஆங்கர் முதலீட்டாளர் பகுதியில் குறைவான சந்தா அல்லது ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால், மீதமுள்ள ஈக்விட்டி பங்குகள் கியூஐபி பகுதியில் (ஆங்கர் முதலீட்டாளர் பகுதியைத் தவிர) (“நிகர கியூஐபி பகுதி”) சேர்க்கப்படும்.

மேலும், நிகர கியூஐபி பகுதியின் 5% மியூச்சுவல் ஃபண்டுகளுக்கு மட்டுமே ஒரு விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும், மேலும் நிகர கியூஐபி பகுதியின் எஞ்சிய பகுதியானது, மியூச்சுவல் ஃபண்டுகள் உட்பட அனைத்து கியூஐபி களுக்கும் (ஆங்கர் முதலீட்டாளர்கள் தவிர) ஒரு விகிதாசார அடிப்படையில் வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும். இருப்பினும், மியூச்சுவல் ஃபண்டுகளின் மொத்தக் கோரிக்கை நிகர கியூஐபி பகுதியின் 5% க்கும் குறைவாக இருந்தால், கியூஐபி களுக்கு விகிதாசார ஒதுக்கீட்டிற்காக மியூச்சுவல் ஃபண்டுக்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள கியூஐபி பங்குகள் மீதமுள்ள கியூஐபி பகுதியுடன் சேர்க்கப்படும்.

மேலும், (அ)நிகர வழங்கலில் 15%க்கு குறையாமல் நிறுவனம் அல்லாத ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும் (இதில் மூன்றில் ஒரு பங்கு ரூ. 2,00,000க்கு மேல் மற்றும் ரூ. 10,00,000 வரையிலான ஏலங்களைக் கொண்ட ஏலதாரர்களுக்கு ஒதுக்கப்படும் மற்றும் மூன்றில் இரண்டு பங்கு ரூ. 10,00,000-க்கு மேல் ஏலத்தொகை உள்ள ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும்)

மற்றும் (ஆ) செபி ஐசிடிஆர் விதிமுறைகளின்படி சில்லறை தனிப்பட்ட ஏலதாரர்களுக்கு ("ஆர் பி ஐ") வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் அவர்களிடமிருந்து பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு நிகர வழங்கலில் 35%க்குக் குறையாமல் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும். மேலும், பணியாளர் ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் தகுதியான ஊழியர்களுக்கு வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு விகிதாச்சார அடிப்படையில் ஈக்விட்டி பங்குகள் ஒதுக்கப்படும்.

ஆங்கர் முதலீட்டாளர்களைத் தவிர மற்ற அனைத்து சாத்தியமான ஏலதாரர்களும், தங்களின் அந்தந்த ஏ எஸ் பி ஏ கணக்கு (இனி வரையறுக்கப்பட்டுள்ளபடி) மற்றும் யூ பி ஐ ஏலதாரர்களைப் பொறுத்தவரை (இனி வரையறுக்கப்பட்டவர்கள்), யூ பி ஐ ஐ டி யின் விவரங்களை வழங்குவதன் மூலம் தடுக்கப்பட்ட தொகை (“ஏ எஸ் பி ஏ”) செயல்முறை மூலம் ஆதரிக்கப்படும் விண்ணப்பத்தின் மூலம் கட்டாயமாக இந்த வழங்கலில் பங்கேற்க வேண்டும். இது பொருந்தும் வகையில் அவர்களின் அந்தந்த ஏலத் தொகைகளின் அளவிற்கு சுய சான்றளிக்கப்பட்ட சிண்டிகேட் வங்கிகளால் அல்லது ஸ்பான்சர் வங்கி(கள்)யால் தடுக்கப்படும் (“எஸ் சி பி கள்”). ஏ எஸ் பி ஏ செயல்முறையின் மூலம் ஆங்கர் முதலீட்டாளர்கள் பகுதியில் பங்கேற்பதற்கு ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு அனுமதி இல்லை. மேலும் விவரங்களுக்கு, பக்கம் 466 இல் உள்ள "வழங்கல் நடைமுறை" என்பதைப் பார்க்கவும்.

ஹெம் செக்யூரிட்டீஸ் லிமிடெட் மட்டுமே இந்த வழங்கலுக்கு ("பி ஆர் எல் எம்") ஒரே புக் ரன்னிங் லீட் மேலாளர் ஆவர்.

இங்கு பயன்படுத்தப்படும் ஆனால் வரையறுக்கப்படாத அனைத்து பெரிய சொற்களும் ஆர் எச் பி இல் குறிப்பிடப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.